# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

<u>ஆக்ராவில் உள்ள இந்தி மத்திய நிலையத்தில் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தி ஆசிரியர்களை உயர் ஸ்தானிகர் சந்தித்தார்</u>

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் ஆக்ராவில் உள்ள இந்தி மத்திய நிலையத்தில் நடைபெறவிருக்கும் இந்தி ஆசிரியர் பயிற்சித் திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 35 இந்தி மொழி ஆசிரியர்களைச் சந்தித்து கலந்துரையாடினார். இலங்கை முழுவதும் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த இந்தி மொழி ஆசிரியர்களுக்காக முதல்தடவையாக முன்னெடுக்கப்படும் பயிற்சித் திட்டம் இதுவாகும். கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார மையத்தால் (SVCC) ஆக்ராவில் உள்ள இந்தி மத்திய நிலையத்துடன் இணைந்து இந்தப் பயிற்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2. இலங்கை முழுவதும் 88 பாடசாலைகள் தற்போது இந்தி மொழியை ஒரு பாடமாக கற்பித்துவருகின்றன. இந்தி மொழி கற்பித்தல் மற்றும் கலாசார புரிதலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்த பயிற்சித் திட்டத்தில் பங்கேற்பதற்காக இலங்கை கல்வி அமைச்சு பாடசாலைகளைச் சேர்ந்த இந்தி மொழி கற்பிக்கும் ஆசிரியர்களைத் தெரிவுசெய்துள்ளது.

3. இந்நிலையில் குறித்த ஆசிரியர்களைச் சந்தித்திருந்த உயர் ஸ்தானிகர் அவர்கள், இலங்கையில் இந்தி மொழி கல்வியை மேம்படுத்துவதில் ஆசிரியர்களின் முக்கிய வகிபாகம் குறித்து நம்பிக்கை தெரிவித்ததுடன் அவர்களுக்கு நல்வாழ்த்துகளையும் பகிர்ந்துகொண்டார். அத்துடன் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான கல்வி மற்றும் கலாசார உறவுகளை வலுப்படுத்துவதில் இந்த முன்னெடுப்பின் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

4. இந்திய அரசின் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு முதன்மை நிறுவனமான ஆக்ராவில் உள்ள இந்தி மத்திய நிலையத்தில் ஆசிரியர்கள் முழுஅளவிலான பயிற்சி பெற உள்ளனர். உலகளவில் இந்தி மொழியை ஊக்குவிப்பதற்கும் கற்பிப்பதற்கும் ஆக்ராவில் உள்ள இந்தி மத்திய நிலையம் அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றது. இப்பயிற்சியின் அங்கமாக கலாசார ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களுக்கும் குறித்த ஆசிரியர்கள் விஜயம் மேற்கொள்ளவுள்ளனர். இந்த முக்கியத்துவமிக்க திட்டமானது கல்வி மேம்பாட்டின் ஒன்றிணைந்த

மனப்பாங்கினையும் இலங்கையில் இந்தி மொழி கல்வியின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டுகிறது.

**********************

**கொழும்பு**
**01 ஜூலை 2025**